MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

குடிபெயர்ந்த
ஊழியர்களுக்கான மாதாந்தி
மின் செய்திமடல்








ஜூன்
2022

## இந்தப் பதிப்பில்:


முக்கிய அறிவிப்புகள்

மோசடி குறித்து ஜாக்கிரதையாக இருங்கள்!

பொழுதுபோக்கு நிலையங்களில் சண்டே ஃபண்டே திருவிழாக்கள்

# முக்கிய அறிவிப்புகள்






## தங்குமிடங்களில் வசிக்கும் வெளிநாட்டு ஊழியர்களுக்கு பிரபலமான இடங்களுக்கான அட்டை அறிமுகம்

24 ஜூன் 2022 முதல், தங்குமிடங்களில் வசிக்கும் வெளிநாட்டு ஊழியர்கள் சமூகத்துக்குச் செல்ல இனி வெளியேறும் அனுமதி அட்டை தேவையில்லை.

ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் பொது விடுமுறை நாட்களில் நியமிக்கப்பட்ட நான்கு பிரபலமான இடங்களில் கூட்டத்தைச் சமாளிக்க உதவ, நீங்கள் SGWorkPass இல் பிரபலமான இடங்களுக்கான அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.




## சம்பளம் மின்- கட்டணம்

உங்கள் சம்பள நாள் வந்துவிட்டதா?

⚠ நீங்கள் தங்கும் விடுதியில் வசிப்பவராக இருந்தால், உங்கள் முதலாளியிடமிருந்து உங்கள் சம்பளத்தைப் பெறும்போது இந்த குறிப்புகளைக் கருத்தில் கொள்ளுங்கள்.

# மோசடி குறித்து ஜாக்கிரதையாக இருங்கள்!

### மின் வர்த்தக மோசடி

விற்பனையாளர்களின் கடந்தகால வரலாற்றை தெரிந்துகொள்ள முன்னர் வாங்கியவர்களின் விமர்சனங்களைப் படியுங்கள்



### மின் வர்த்தக மோசடி

முன்கூட்டியே பணத்தைக் கொடுக்காதீர்கள்



### மின் வர்த்தக மோசடி

உங்களுக்கு முன்பின் தெரியாத அல்லது நேரடியாகச் சந்திக்காத ஒருவருக்குச் சொந்தமான வங்கிக் கணக்கிற்கு பணத்தை மாற்றிவிடாதீர்கள்.



மோசடிகள் பற்றி மேலும் அறிந்துகொள்ள, இந்த இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்:

scamalert.sg

அறிகுறிகளைக் கண்டறியவும். குற்றங்களை நிறுத்து.

SINGAPORE POLICE FORCE SAFEGUARDING EVERY DAY

NATIONAL CRIME PREVENTION COUNCIL

## சாலையைக் கடக்கும்போது விழிப்புடன் இருங்கள்!

சாலையைக் கடக்கும்போது விழிப்புடன் இருங்கள்!

## எங்கள் வெளிநாட்டவர் சமூகம்

இவர் தான் சீ டோங். சீனாவிலிருந்து வந்திருக்கும் எங்கள் வெளிநாட்டு ஊழிய நண்பர். 14 ஆண்டுகளுக்கு முன்பு லிட்டில் இந்தியாவில் உள்ள பூக்கடையில் முதன் முதலில் வேலை செய்த இவருக்கு ஆங்கிலமோ தமிழோ பேசத் தெரியாது.

பல ஆண்டுகளாக, சீ டோங் தனது முதலாளியிடம் இருந்து தமிழ் கற்றுக்கொண்டார். மேலும், தனது ஓய்வு நேரத்தில் சீன வசனங்களுடன் இந்தியப் படங்களைப் பார்க்கிறார். இன்று அவரால் தனது முதலாளி மற்றும் வாடிக்கையாளர்களுடன் சரளமாக தமிழ் பேச முடிகிறது. அதோடு, அவர்களுக்கு அழகான பூமாலைகளை வடிவமைக்கிறார்.

மொழிகளைக் கற்றுக்கொள்வதில் ஆர்வ ம் கொண்டவர்களை, கற்றுக்கொள்வதற்கான விருப்பத்துடனும், கடின உழைப்புடனும், உறுதியுடனும் செய்ய அவர் ஊக்குவிக்கிறார்.

உங்கள் கதையை எங்களுடன் பகிர்ந்து கொண்டதற்கு நன்றி, சீ டோங்! அவருடனான எங்கள் நேர்காணலை இங்கே உள்ள இணைப்பில் பார்க்கவும்.

*சிங்கப்பூரில் உங்கள் வாழ்க்கையைப் பற்றி பகிர்ந்து கொள்ள சுவாரஸ்யமான கதை ஏதேனும் உள்ளதா? இந்த இணைப்பைக் கிளிக் செய்து அதனை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்*



தனது முதலாளியுடன் சீ டோங்



சீ டோங் மற்றும் அவரது சக ஊழியரால் செய்யப்பட்ட பூமாலைகள்

# நிகழ்வின் சிறப்பம்சங்கள்

## கிராஞ்சி பொழுதுபோக்கு நிலையத்தில் (KRC) ஞாயிறு ஃபண்டே கார்னிவல்

12 ஜூன் 2022 அன்று, KRCக்குச் சென்ற வெளிநாட்டு ஊழியர்கள் ஒரு நாள் விளையாட்டுகளையும் இலவச உணவையும் அனுபவித்தனர்!

அவர்கள் வில்வித்தை, இலக்கை தாக்கு, காந்த மீன்பிடித்தல் மற்றும் NERF டார்ட் போர் போட்டி போன்ற விளையாட்டுகளில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்காக மக்கள் கழக இளைஞர் இயக்கம் (PAYM) மற்றும் கியெட் ஹோங் இளைஞர்களுக்கு நன்றி!





## கேரம் போட்டி @ தெம்பனிஸ் தங்கும் விடுதி

தெம்பனிஸ் தங்கும் விடுதியில் வசிப்பவர்கள் 26 ஜூன் 2022 அன்று பரிசுகளுடன் கூடிய கேரம் போட்டியை அனுபவித்தனர்.

இந்த நிகழ்ச்சியை வழிநடத்த உதவிய தெம்பனிஸ் தங்கும் விடுதி குழுவிற்கும், பரிசுகளை வழங்க உதவிய கிங்ஸ் கேட்டரிங் நிறுவனத்திற்கும் நன்றி!








## உட்லண்ட்ஸ் பொழுதுபோக்கு நிலையத்தில் (WRC) சண்டே ஃபன் டேஸ் விளையாட்டு திருவிழா

5 ஜூன் 2022 அன்று, உட்லண்ட்ஸ் வட்டாரத்தில் வசிக்கும் வெளிநாட்டு ஊழியர்களுக்கு IM தொண்டூழியர் அமைப்பு SGவும் மற்றும் சிங்கப்பூர் போலீஸ் படையும் (SPF) ஒரு விளையாட்டு திருவிழாவை நடத்தின.

விளையாட்டு மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் மூலம், பங்கேற்பாளர்கள் பிணைப்பையும் தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது.

பங்கேற்பாளர்கள் SPF அதிகாரிகளின் பேச்சுக்கள் மூலம் மோசடிகள் பற்றி அதிகமாக அறிந்து கொள்ள முடிந்தது மற்றும் அதற்கு எதிராக விழிப்புடன் இருக்க நினைவூட்டப்பட்டது.

இதை வழிநடத்த உதவிய WRC குழுவிற்கு நன்றி!



ள் பங்கேற்கக்கூடிய
வறு நேரடி மற்றும்
ணைய நடவடிக்கைகளைப்
மேலும் அறிய இங்கே
னப்படும் QR குறியீட்டை
கேன் செய்யவும்!

https://go.gov.sg/weeklybulletin-tamil-7july

*அண்மைய செய்திகள் மற்றும் புதுப்பிப்புகளைப் பற்றி அறிய எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!*

- ஏஸ் குழுமத்தின் ஃபேஸ்புக் பக்கம்
- ஏஸ் குழுமத்தின் டிக்டொக் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி